பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்பி

மலர்: 16] சென்னை: கார்த்திகை 27 (12—12—68) வியாழன் வெளியீடு: கார்த்திகை 28 (13—12—68) வெள்ளி [இதழ்: 148

## பம்பாயில் அரை கோடி பேர்!

பம்பாய் பெருநகரத்தின் மொத்த நிலப்பரப்பு 169 சதுர மைல் ஆகும். 1961-ல் அதன் மக்கள் தொகை 41,52,000 ஆக இருந்தது; இப்போது சுமார் 50 இலட்சம்; 1981-ம் ஆண்டு வாக்கில் இது 72 இலட்சமாகக் கூடும்.

சராசரியாக ஓர் ஏக்கராவில் 165 பேர் வாழ்கிறார்கள். சில பகுதிகளில் 3,500 பேர்கூட ஓர் ஏக்கரா பரப்பில் வாழ்கிறார்கள்.

# இந்தி பேசா மக்கட்கு அநீதி நீடிக்கும்

## அதிகப்படியான மொழிச் சுமையை நீக்க இயலாதாம்

## பொதுக் கருத்து உருவாகும்வரை பொறுத்துக்கொள்ள வேண்டுமாம்!

### நாடாளுமன்றக் கேள்விகளுக்குத் துணை அமைச்சர் வி. சி. சுக்லா அளித்த பதில்

புதுடில்லி, டிச. 12—

மொழிப் பிரச்சினை பற்றி நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானம் இந்தி பேசாத மக்களுக்கு அதிகப்படியான சுமை ஏற்படுத்துகிறதென்று புகார் கூறப்படுவதைப் பற்றி மக்களவையில், உள்துறைத் துணை அமைச்சர் சுக்லா, அரசின் நிலைமையை விளக்குகையில் குறிப்பிட்டதாவது:—

"இது சம்பந்தமாக தேசியப் போதுக் கருத்து ஒன்று உருவாகாத வரை, இந்த அதிகப்படிச் சுமையை அகற்றுவதற்கு அரசு, தானே எந்த ஏற்பாட்டையும் கொண்டுவர விரும்பவில்லை; ஆயினும், இந்தி தெரியாத அரசு ஊழியர்களுக்கு எதிராக எந்தப் பாகுபாடும் காட்டப்படமாட்டாது.

"இது மிகவும் எச்சரிக்கையுடன் கவனிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாகும். இதில் அரசு அவசரப்பட விரும்பவில்லை. இது சம்பந்தமாக ஏதாவது ஒரு போதுக் கருத்து உருவானால் அரசு அதை ஏற்றுக்கொள்ளும்; அரசும் அதற்குத்தான் முயற்சி செய்துகொண்டிருக்கிறது."

"மத்திய பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் பரீட்சைகள், வட்டார மொழிகளில் இருக்கும்போது இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் என்ன சிரமம்?"

என்று ஒரு ஜனசங்க உறுப்பினர் கேட்டார்.

அமைச்சர்:—"இந்த அதிகப்படிச் சுமையை அகற்றுவதற்குப் பல யோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன; ஆனால் எல்லோரும் ஏற்கக்கூடிய ஒரு பொதுத் தீர்வையே அரசு எதிர்பார்க்கிறது; இந்தப் பிரச்சினையில் மேலும் தகராறுகள் ஏற்படுவது நாட்டின் நலன்களுக்கு நல்லதல்ல."

கேள்வி:—"இந்தி பேசும் பகுதிகளிலிருந்து வருபவர்கள் கட்டாயமாக வங்காளி அல்லது தமிழ் அறிந்திருக்க வேண்டுமென்ற அடிப்படையில் ஓர் ஏற்பாடு செய்தால் என்ன?"

அமைச்சர்:—"இதில் பேரம் கூடாது; எல்லோரும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் ஏற்பாடுதான் முக்கியம்."

கேள்வி:—"இந்தியில் உள்ள 'பைல்'களைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்ற காரணத்திற்காக சில மத்திய அரசு அதிகாரிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா? இவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெறும் வரை அம்மாதிரி ஒன்றும் இராதென்று அரசினர் உறுதி கூறுவார்களா?"

அமைச்சர்:—"மத்திய அரசு பதவி சம்பந்தப்பட்ட வரையில் ஆட்சி மொழிகளில் ஏதாவது ஒன்று தெரிந்திருக்கிறது அல்லது தெரியவில்லை என்ற காரணத்திற்காக, எந்தப் பாகுபாட்டையும் அனுமதிப்பதில்லை என்பதே அரசின் முடிவான கொள்கையாகும்."

## தஞ்சைக் கோயிலைப் பழுது பார்க்க டெல்லியின் முட்டுக்கட்டை

### தமிழக அரசின் கோரிக்கையை ஏற்க மறுப்பு

#### தில்லைவில்லாளன் கேள்விக்கு மத்திய அமைச்சர் பதில்

புதுடில்லி, டிச. 12—

"தஞ்சையில் உள்ள பிரகதீசுவரர் கோவிலை தமிழக அரசிடம் ஒப்படைக்க முடியாது" என்று டெல்லி அமைச்சர் கூறிவிட்டார்.

**தஞ்சை பிரகதீசுவரர் கோவில் பொறுப்பு மத்திய அரசின் பழம்பொருள் பாதுகாப்பு நிறுவனத்திடம் இருக்கிறது! ஆகவே அந்தக் கோவிலைப் பழுது பார்ப்பதற்குத் தற்போது தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை.**

இந்தப் பிரச்சினையை நாடாளுமன்ற மேலவையில் கழக உறுப்பினர் தில்லைவில்லாளன் எழுப்பினர்; 'தஞ்சைப் பிரகதீசுவரர் கோவிலை தமிழக அரசின் பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும்' என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்கு மத்திய அரசின் கல்வித் துறைத் துணையமைச்சர் ஷெர்சிங் பின்வருமாறு பதிலளித்தார்:—

"மத்திய அரசின் பழம்பொருள் பாதுகாப்பு நிறுவனத்தின் பொறுப்பில் பிரகதீசுவரர் கோவில் இருப்பதால், அதைத் தமிழக அரசிடம் ஒப்படைக்க முடியாது."

## கச்சத் தீவுப் பிரச்சினையில் டெல்லியின் அலட்சியம்

### உரிமையை நிலைநாட்டுவதில் உள்ள தடை என்ன?

#### நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் கந்தப்பன் கண்டனம்

புதுடில்லி, டிச. 12—

"கச்சத் தீவு பற்றிய தகராறு, பல ஆண்டுகளாக இருந்துவருகிறது; எல்லையைப் பாதிக்கும் இந்த முக்கியப் பிரச்சினையில்கூட மத்திய அரசு, பட்டும் படாமலும் நடந்துகொண்டுவருகிறது. அரசின் இராசதந்திரக் குளறுபடிதான், இந்தியாவிடம் இலங்கை மக்களுக்கு இருந்த ஆதரவை இழக்கும்படிச் செய்துவிட்டது.

"திராவிட முன்னேற்றக் கழகம் பற்றியும், தமிழர்களைப் பற்றியும் இலங்கை மக்களிடம் நிலவிவரும் தவறான எண்ணங்களைப் போக்குவதற்கு டெல்லி அரசு எதுவும் செய்யவில்லை.

"கச்சத் தீவு பற்றி சுமூகமான உடன்பாடு ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது எது என்பதைத் திட்டவட்டமாக அரசு அறிவிக்க வேண்டும்"

என்று நாடாளுமன்ற மக்களவையில், கழக உறுப்பினர் செ. கந்தப்பன் அவர்கள், கச்சத் தீவுத் தகராறு பற்றி நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் சுட்டிக்காட்டிக் கோரிக்கை விடுத்தார்.

விவாதத்தைத் துவக்கிவைத்து சோஷலிஸ்டு உறுப்பினர் காமேசுவர சிங் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாட்டில் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்படுவதற்கு முன்பு, கச்சத் தீவு, இராமநாதபுரம் இராசாவுக்குச் சொந்தமாக இருந்தது; அதற்கான சான்றேடுகளை அரசுக்கு அவர் அனுப்பிவிட்டார்; அந்தச் சான்றேடுகளை, அவையில் தாக்கல் செய்யவேண்டும்.

கச்சத் தீவு நமக்குத்தான் சொந்தம் என்பது தெளிவு. ஆனால் டெல்லி அரசுதான் பலவீனமான போக்கில் நடந்து கொண்டு வருகிறது."

(4-ம் பக்கம் பார்க்க)

ஸ்டாக்ஹோம், டிச. 12—

இந்தியாவைச் சேர்ந்த விஞ்ஞானியும் தற்போது அமெரிக்காவில் குடியுரிமை பெற்றிருப்பவருமான டாக்டர் ஹரிகோவிந்த கொரானா, மருத்துவத் துறை ஆராய்ச்சிக்கான நோபல் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

## அண்ணா சிகிச்சை நிதிக்கு ரூ. 25,665

### ஒரே நாளில் தஞ்சைத் தரணி தந்த காணிக்கை

#### கருத்திருமனுக்கு மக்கள் கற்பித்த பாடம்

தஞ்சை, டிச. 12—

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்கு தஞ்சை மாவட்டத்து மக்கள் ஒரே நாளில் ரூ. 25,665-ஐ, கழகப் பொருளாளர் கருணாநிதி அவர்களிடம் அளித்தனர்.

பொதுப்பணி அமைச்சரும் கழகப் பொருளாளருமான திரு. மு. கருணாநிதி அவர்கள் நேற்று தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது, மாயூரம், செம்பனார்கோவில், நாகை, சீகாழி, மன்னார்குடி, இட்மேலையூர் ஆகிய பகுதிகளிலிருந்து அண்ணா சிகிச்சை நிதிக்காக அவரிடம் ரூ. 5,869.00 அளிக்கப்பட்டது.

இரவு தஞ்சையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஏறத்தாழ ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு, கழகப் பொருளாளரிடம் அண்ணா சிகிச்சைக்காக நிதியளிப்பதில் தங்களது கட்டுக்கடங்கா ஆர்வத்தைக் காட்டினர்.

இக்கூட்டத்தின்மூலம் சிகிச்சை நிதிக்காகக் கிடைக்கப்பெற்ற தொகை ரூ. 19,796 ஆகும்.

ஆக, தஞ்சை மாவட்டத்தில் பொருளாளர் கருணாநிதி கலந்துகொண்ட ஒரு நாள் சுற்றுப்பயணத்தின் மூலம் அண்ணா சிகிச்சை நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 25,665.

"இன்று அளிக்கப்பட்ட பெருந்தொகை அண்ணா சிகிச்சை நிதிக்காக மட்டும் அளிக்கப்பட்டதாகக் கருதவில்லை; அண்ணா சிகிச்சை நிதியை, 'அரசியல் மோசடி' என வர்ணித்த எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமனின் அரசியல் நாகரீகமற்ற பேச்சுக்குப் பொது மக்கள் தந்த பாடமாகவும் கருதுகிறேன்"

என நிதியளித்த மக்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய பொருளாளர் கருணாநிதி, பலத்த கையொலிக்கிடையே குறிப்பிட்டார்.

# அரிசி உற்பத்தி அதிகரிப்பு

## விலை வீழ்ச்சியடைய வாய்ப்பு

"அரிசி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முந்திய ஆண்டு உற்பத்தியே முழுதும் ஏற்றுமதி செய்யப்படாத நிலையில், புதிய விளைச்சல்மூலம் கையிருப்பு பெருகிக்கொண்டு வருவதால் வருகிற ஆண்டில் அனைத்து நாட்டு வர்த்தக நிலையில் அரிசி விலை மேலும் வீழ்ச்சியடையும்"

என்று இலண்டனில் உள்ள காமன் வெல்த் தலைமையகத்தின் குறிப்பு ஒன்று கூறுகிறது.

1967-68-ம் ஆண்டில் சீனு, சோவியத் யூனியன் ஆகிய இரு நாடுகள் நீங்கலாக மற்ற நாடுகளின் அரிசி உற்பத்தி கணிசமாக உயர்ந்திருக்கிறது.

இதுவரை அதிக உற்பத்தி செய்து சாதனை ஏற்படுத்திய 1964-65-ஆம் ஆண்டு உற்பத்தியை விட 1967-68-ல் உற்பத்தி 3½ சதவிகிதம் அதிகம்.

### இந்தியாவின் நிலை

அரிசி உற்பத்தியில் முக்கிய இடம் வகிக்கும் இந்தியா பற்றியும் இக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. 1967-68-ம் ஆண்டில் இந்தியாவில் 9 கோடியே 7 இலட்சம் ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ளது; 1966-67-ம் ஆண்டில் பயிர் செய்யப்பட்ட நிலத்தைவிட இது 4 சதவிகிதம் அதிகம்.

உற்பத்தியும் முந்தின ஆண்டு 30 மிலியன் டன்களாக இருந்தது, 1967-68-ல் 37.3 மிலியன் டன்களாக உயர்ந்திருக்கிறது.

இந்த உற்பத்தி உயர்வுக்குக் காரணம் விளைச்சல் நிலம் விரிவாக்கப்பட்டதுடன் இரசாயன உரம் பெரும் அளவில் உபயோகப் படுத்தப்பட்டதும் தான்.

# அரிசி ஆலைத் தொழிலில் நவீனமுறை

## நிபுணர்கள் அறிக்கை பரிசீலனை

### மத்திய உணவுத் துறை அதிகாரி தகவல்

கரக்பூர், டிச. 12—

"நாட்டில் உள்ள அரிசி ஆலைத் தொழிலை நவீனமயமாக்குவதென மத்திய அரசு தீர்மானித்திருக்கிறது"

என்று மத்திய உணவு அமைச்சுத் துறைச் செயலாளர் ஏ. எல். டயஸ் தெரிவித்தார்.

அவர் இங்கு இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தில் அரிசி உற்பத்தி சம்பந்தமான தொழில் முறைகள் பற்றிய பயிற்சிவகுப்பைத் துவக்கி வைத்துப் பேசினர்.

"அரிசி ஆலை முறையை நவீனமயமாக்குவது பற்றிய போர்டு நிறுவன நிபுணர்கள் அறிக்கை ஒன்று மத்திய அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

"மைசூரில் உள்ள மத்திய உணவு ஆராய்ச்சி நிலையம், போர்டு நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் இதற்காக முன்னோட்டத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்றார்.

"விரயங்களைத் தவிர்க்கவும், ஊட்டச் சத்துக்களைக் காக்கவும் புதிய முறைகளை மேற்கொண்டு விவசாயத் துறையில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தினுல்தான், நாம் உணவுத் தானியத் தேவையில் தன்னிறைவை அடையமுடியும்" என்றார்.

"நான்காவது திட்டகால இறுதியில் நெல் உற்பத்தி 8 கோடி டன்னுக இருக்கும்; கடந்த 5 ஆண்டுக் காலத்தில் உற்பத்தி 5.4 கோடி டன்தான்" என்றும் கூறினர்.

"அரிசி ஆலைகளை நவீனமயமாக்குவது நாம் தன்னிறைவை அடைவதற்கு உதவியாக இருக்கும்; நெல்லிலிருந்து அதிகபட்ச அளவுக்கு அரிசி எடுத்து நாம் ஏற்றுமதி செய்ய இயலும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சாதி-மத-நிற பேதங்களை ஒழிப்போம்

## மனித உரிமை நாள் விழாவில் கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் உரை

சென்னை, டிச. 12—

கல்லூரிகள்—பள்ளிகளின் சார்பில் 'மனித உரிமைகள் நாள்' 20-ம் ஆண்டு விழா மவுண்ட் ரோடு சிறுவர் அரங்கில் கொண்டாடப்பட்டது.

விழாவிற்குத் தலைமை வகித்த கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மனிதனின் அடிப்படை உரிமைகள் உலகெங்கும் உள்ள அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்துவதே இந்த விழாவின் நோக்கமாகும்.

"சாதி மதம் ஆகியவை பேரால் மனிதனுக்கு மனிதன் காட்டும் பாரபட்சங்களை ஒழித்து அனைத்து மக்களுக்கும் அடிப்படை உரிமைகள் கிடைக்கச்செய்ய வேண்டும்."

தமிழக அரசின் தலைமைக் கல்வி ஆலோசகர் திரு. நெ. து. சுந்தர வடிவேலு அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் '2000 ஆண்டுகளுக்கு முன்பே மனித உரிமைகளை வற்புறுத்தி திருவள்ளுவர் தமது திருக்குறளில் பாடியிருக்கிறார்' என்று கூறினர்.

மனித உரிமைகளைப் பேணுவதற்காக நிறுவப்பட்ட ஐ.நா.-வின் நற்பணிகளையும், அது உலகுக்கு ஆற்றிவரும் சேவைகளையும் விளக்கி மாநில மட்டத்தில் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியும்—கட்டுரைப்போட்டியும், பள்ளிகளுக்கான பேச்சுப் போட்டியும்—கட்டுரைப் போட்டியும் நடைபெற்றதில் பரிசு பெற்ற மாணவ— மாணவிகளுக்கு திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் பரிசுகளை வழங்கினர்.

தமிழகப் பள்ளிக்கல்வி இயக்குநர் திரு. மா. தே. பால் நன்றி கூறினர்.

பிறகு விழாவையொட்டி நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளை, விழாவில் கலந்துகொண்ட நில இயல் மாநாட்டுப் பிரதிநிதிகளும் கண்டுகளித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது

## போதிய தானியக் கையிருப்பு உள்ளது

### தமிழக உணவு நிலைமை பற்றி அதிகாரி தகவல்

கோவை, டிச. 12—

"மாநிலத்தில் உணவு நிலைமை மன நிறைவுடும் வகையில் இருக்கிறது; அடுத்த சம்பா அறுவடை வரை சமாளிப்பதற்குப் போதுமான உணவுத் தானியம் இருப்பில் இருக்கிறது"

என்று உணவு வழங்குதுறை ஆணையர் கே திரவியம் கூறினர். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் மழை பெய்யத் தவறிவிட்டது; மழை பெய்திருந்தால், நிலைமை இன்னும் நன்ருக இருந்திருக்கும்.

"தஞ்சை, தென்னுற்காடு மாவட்டங்களில் மகசூல் நன்ருக இருக்கிறது.

"தஞ்சை மாவட்டத்தில் ஏற்கனவே 175 இலட்சம் டன் கொள்முதலாகியிருக்கிறது.

"கோவையிலும், மற்ற மாவட்டங்களிலும் நிர்ணயித்துள்ள இலக்குகளைக் கொள்முதல் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது."

# அதிக விளைச்சல் தரும் இலங்கை நெல் ரகம்

## தமிழகத்தில் பயிரிடத் திட்டம்

சென்னை, டிச. 12—

இலங்கையில் வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்க்கப்பட்ட அதிக விளைச்சல் தரும் 'எச். 4'—'எச். 5' ரக நெல் விதைகளைச் சாகுபடி செய்யத் தமிழக அரசு எண்ணியுள்ளது.

வேளாண்மை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி இத்தகவலைத் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து வந்துள்ள 62 விவசாயிகளுடன் அமைச்சர் விவாதித்தார்; இந்திய அரசின் அழைப்பின்பேரில அவர்கள் இந்நாட்டுக்கு வந்துள்ளனர்.

'எச். 4'—'எச். 5' ரகங்கள் பயிரிடுவதன்மூலம் ஏக்கருக்கு சுமார் 4,000 இராத்தல் உற்பத்தி செய்ய இயலும் என்றும், இந்த ரகங்களுக்கு அதிக அளவு இரசாயன உரங்கள் தேவையில்லை என்றும், சாகுபடிக் காலம் 120 நாட்களே என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"இந்த ரகங்களின் சாகுபடி குறித்து இலங்கையிலிருந்து அரசு விவரங்களைக் கோரும்" என்றார்.

## உலக சமாதான வழிபாடு

### போப்பாண்டவர் அறிவிப்பு

ஐ. நா. டிச. 12—

மனித உரிமைகளின் வளர்ச்சி மூலம் உலகம் முழுவதும் சமாதான வழிபாட்டு நாளாக சனவரி முதல் தேதியை கத்தோலிக்க சர்ச்சுகள் அனுசரிக்கும் என்று போப்பாண்டவர் அறிவித்தார்.

'மனித உரிமைகள் பிரகடன நாள்' விழாவுக்கு அவர் செய்தி விடுத்தார்; 'மனித சமூகத்தின் ஐக்கியம் சம்பந்தமாகத் தமது பொறுப்புக்களை கத்தோலிக்க சர்ச் ஒருபோதும் தட்டிக்கழிக்காது' என்று அவர் குறிப்பிட்டார்.

# இரஷ்யாவின் இராணுவச் செலவு

## ரூ. 14,655 கோடிக்குத் திட்டம்

புதுடில்லி, டிச. 10—

சோவியத் இரஷ்யா, 1969-ஆம் ஆண்டுக்கான இராணுவ வரவு-செலவுத் திட்டத்தை இன்று அறிவித்தது.

81,420 இலட்சம் பவுன் (14655.6 கோடி ரூபாய்) மதிப்பில் இந்த வரவு—செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இவ்வளவு பெரிய தொகைக்கான வரவு-செலவுத் திட்டம் வெளியானதில்லை!

# ரூ. 8 இலட்சம் நம்பிக்கைத்துரோகம்

## கடற்படைத் தலைமை அலுவலக அதிகாரிமீது குற்றச்சாட்டு

### ரூ. 34,500 இலஞ்சம் வாங்கியதாக எஸ்டேட் வரி அதிகாரிமீது வழக்கு

புதுடில்லி, டிச. 12—

இலஞ்ச ஊழல் குற்றங்களுக்காக இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் மத்தியப் புலன் விசாரணைப் பிரிவு, 61 வழக்குகளைப் பதிவு செய்திருக்கிறது; இவற்றுள் எட்டு கெசட் பதிவு அதிகாரிகளும், 71 கெசட் பதிவில்லாத ஊழியர்களும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

கடற்படைத் தலைமை இடத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் ரூ. 8 இலட்சம் சம்பந்தமாக நம்பிக்கைத் துரோகம் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

எஸ்டேட் வரி உதவி கண்ட்ரோலர் ஒருவர், ஒரு வியாபாரியிடமிருந்து ரூ. 34,500 இலஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, இது சம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

டாக்டர்களிடமிருந்து போலிச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு கள்ளத்தனமாக மருத்துவச் சிகிச்சைப் பணம் பெற முயன்ற குற்றத்திற்காக அஞ்சல் துறையைச் சேர்ந்த 55 ஊழியர்களும், கலங்கரை விளக்கப் பிரிவைச் சேர்ந்த ஊழியர் ஒருவம், அரசாங்க டாக்டர்கள் 4 பேரும், மருந்துக் கடைக்காரர்கள் 4 பேரும் ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிருர்கள்.

பரிசீலனை மாதத்தில் பகிரங்க விசாரணைக்காக 177 வழக்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. 31 கெசட் பதிவு அதிகாரிகள் உட்பட 228 அரசாங்க ஊழியர்கள் இவற்றில் சம்பந்தப்பட்டிருந்தார்கள்.

16 வழக்குகளில் குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

# குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் தீவிரமாகச் செயல்பட...!

## அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுரை

செங்கற்பட்டு, டிச. 12—

"இந்தியாவில் வளர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட வேண்டுமானுல் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நாம் வெற்றிகரமாகச் செயல்படுத்தி ஆகவேண்டும்.

"இப்போதே இந்தியாவின் மக்கள் தொகை 50-கோடியாக இருக்கிறது; இன்னும் சில ஆண்டுகளில் இதே முறையில் மக்கள் பெருக்கம் ஏற்பட்டால், இந்தியா முழுவதிலுமே மனிதத் தலைகள்தான் தென்படும்!

"மக்கள் தொகை அதிகமாவதுபோல் மண்வளம் அதிகமாவது இல்லை. காவிரியையும் கங்கையையும் வைத்துக்கொண்டு தான் முன்பு 33-கோடி மக்களுக்கு உணவு உற்பத்தி செய்யப்பட்டது; அதே வளத்தையும், பூமியையும் கொண்டுதான் இன்றும் 50-கோடி மக்கள் சாப்பிடவேண்டிய நிலை இருக்கிறது!

"எனவே, இந்தியாவின் எதிர்கால வளர்ச்சிக்கு நாம் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தவேண்டும்; இதைப் படித்தவர்கள் நன்கு புரிந்துகொண்டுவிட்டனர்; படிக்காத ஏழைகள்தான் இன்னும் உணர்ந்துகொள்ளவில்லை! அவர்களில், திட்டத்தைப் புரிந்துகொண்டவர்களும் கருத்தடை அதிகாரிகளிடம் சென்று ஆலோசனை கேட்க வெட்கப்படுகிருர்கள்!

"ஆகவே அதிகாரிகள், ஏழை மக்களிடம் நேராகவே சென்று கருத்தடையின் அவசியத்தை விளக்கவேண்டும்; அதற்கான முறைகளை எடுத்துச் சொல்லவேண்டும்; பெண்களிடம், பெண் ஊழியர்கள் தனியாகச் சென்று எடுத்துரைக்க வேண்டும்; இப்படிச் செய்தால், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பலனை நாம் முழுமையாகப் பெற முடியும்."

— அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்

(கூடுவாஞ்சேரி குடும்பக் கட்டுப்பாட்டு விழாவில்)

# முன்னுள் இராணுவ வீரருக்குத் தொழில் நடத்தக் கடன்

## முன்னுதாரணமாக ஒருவர் டாக்சி வாங்கினர்

சென்னை, டிச. 12—

முன்னுள் இராணுவத்தினர் மறுவாழ்வுக்கான சிறப்புநிதியிலிருந்து அளிக்கப்பட்ட கடனுதவியைக் கொண்டு வாங்கப்பட்ட ஒரு டாக்சியை காப்டன் ஜி. சொக்கலிங்கம் என்பவருக்குக் கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங் வழங்கினர்; இவ்விழா அடையாறு டெக்னுலஜியில் நடந்தது.

சிறப்பு நிதியிலிருந்து காப்டன் சொக்கலிங்கத்துக்கு ரூ. 25,000 கடனுதவி அளிக்கப்பட்டது. இவர் இராணுவத்தில் 25 ஆண்டுக் காலம் பணிபுரிந்தவர்.

இவர் இந்த உதவியைக் கொண்டு அம்பாசிடர் டாக்சி வாங்கினர். ஐந்தாண்டுக் காலத்தில் கடனுதவியை இவர் திருப்பிச் செலுத்த வேண்டும்; வட்டி 6½ சதவிகிதம்.

டாக்சி சாவியை கவர்னர், காப்டன் சொக்கலிங்கத்திடம் கொடுத்தார்; 'இதுபோன்ற பயனுள்ள தொழிலை, இவரை உதாரணமாகக் கொண்டு மற்ற முன்னுள் இராணுவத்தினரும் மேற்கொள்வரென நம்புகிறேன்' எனக் கவர்னர் கூறினர்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி வரவேற்ருர்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் வி. ஏ. இராமகிருஷ்ணனும் இவ்விழாவுக்கு வந்திருந்தார்.

# மேலவையின் உரிமைகள் மட்டுப்படுத்தப்படும்

## கீழவை கொண்டுவரும் மசோதா தடங்கலின்றி நிறைவேற வழி

### பிரிட்டிஷ் நாடாளுமன்றச் சீரமைப்பு --- வில்சன் விளக்கம்

இரு சட்ட மன்றங்கள் இயங்கிவரும் நாடுகளில் அல்லது மாநிலங்களில் அரசியல் மாறுதல்கள் ஏற்படும்போது ஆளும் கட்சிக்கு இரண்டு அவைகளிலும் பெரும்பான்மையில்லாத நிலை ஏற்படக் கூடும். அந்த நிலையில், மக்களின் நேரடியான வாக்குகள் பெற்றுச் சட்டமன்றம் வந்த கீழவை உறுப்பினர்கள் நிறைவேற்றும் ஒரு மசோதாவை, வயதுவந்த அனைவரின் வாக்குகளையும் பெறுமல் உறுப்பினர்கள் ஆகிவிட்ட மேலவை உறுப்பினர்கள் தாமதப்படுத்த முடியும்—நிராகரிக்கவும் முடியும் என்ற நிலை இருக்கிறது. இவர்களின் உரிமைகளுக்கு ஒரு காலக் கெடு இருக்கக்கூடும்; ஆனலும், குறைந்த காலத்திற்காவது தாமதப்படுத்தவோ, தள்ளிவைக்கவோ இவர்களுக்கு உரிமை உண்டு என்பது உண்மை.

மக்கள் பிரதிநிதிகள் நிறைவேற்றும் ஒரு மசோதா, நேரடியாக அதே முறையில் உறுப்பினர் ஆகாத ஒரு குழுவினுல் நிராகரிக்கப்படுமானல், அதனைக் காணும்போது, 'சனநாயகம் முழுமையாகச் செயல்படுகிறதா' என்று சிலர் ஐயுறக்கூடும். இதே நிலை இன்று பிரிட்டனிலும் இருப்பதால்தான், பிரபுக்கள் சபையினைச் சீரமைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன; அந்த விவரங்களை இக்கட்டுரை விளக்குகிறது :—

மிகப் பல நாடுகளுக்கு நாடாளுமன்ற முறையில் வழிகாட்டியாக இருந்துவரும் பிரிட்டனில், ஆட்சிப் பொறுப்பு மக்கள் (காமன்சு) சபையிடம் இருந்தாலும், மக்கள நன்மைக்காக அல்லது ஆட்சிக்கு வரும் கட்சியின் கொள்கை என்பதற்காக இந்தச் சபை நிறைவேற்றும் மசோதாக்கள் உடனே அமுலுக்கு வர முடியாது; அந்த மசோதா பிரபுக்கள் சபைக்குச் சென்று—விவாதங்களைக் கடந்து—வாக்கெடுப்பில் தப்பித்து வந்தால்தான் சட்டமாகும்; நடைமுறைக்கு வரும்.

இத்தனைக்கும் மக்கள் சபை, வயதுவந்த அனைவரின் வாக்குகளையும் பெற்ற உறுப்பினர்கள் கொண்ட சபையாகும். பிரபுக்கள் சபையோ (மேலவை) 'உருவாக்கப்பட்ட' அமைப்புதான்.

குறிப்பிட்ட ஒரு கட்சியின் கொள்கைகளை விரும்பி --- அக்கட்சி பதவிக்கு வர வாய்ப்பு அளித்தால் அவற்றைச் செயல்படுத்துவார்கள் என்று கருதி--அவர்களுக்கு வாக்களித்து -- மக்கள் சபைக்கு மக்கள் அனுப்பிவைக்கிருர்கள. அப்படிப் பதவிக்கு வந்தவர்கள், முன்சொல்லி வந்த கருத்துக்களைச் செயல்படுத்துகிருர்களா என்பதைத்தான் மககள் கவனிக்கிருர்கள்; செயலாக்கப்படுவதையே விரும்புகிருர்கள். உறுப்பினர்களும் அந்த முறையில் மசோதாக்களைக் கொணடுவர முயலுகையில், வேறு ஓர் அமைப்பு அதறகு முட்டுக்கட்டை போடும் போதுதான், 'மக்களாட்சிமுறை சரிவர--முழுமையாகச் செயல்படுகிறதா' என்ற கேள்வி எழுகிறது. இந்நிலை நீடிப்பதை அம்மககளே விரும்ப மாட்டாாகள் என்பது ஒருபுறமிருக்க, ஆட்சிபுரிவோரின் 'விருவிருப்பு'க்கூட ஓரளவு பாதிக்கப்படலாம்.

எனவேதான், பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரைத் துவக்கிவைததுப் பேசிய தலைமையமைச்சர் திரு. வில்சன், பிரிட்டனின் பிரபுக்கள் சபையில் சில மாறுதல்களைச் செய்து, காலததிற்கேறற சீரமைப்பு வேலைகளை மேற்கொள்வதுபற்றிச் சில விவரங்களை வெளியிட்டிருக்கிருர்; அவற்றின்படி :—

பிரபுக்கள் சபையில் பரம்பரை உரிமையிலான பிரதிநிதித்துவம் நீக்கப்படும்.

பிரபுக்கள் சபையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் இனி வாக்குரிமை இராது.

பிரபுக்கள் சபை உறுப்பினர் அனைவரும் விவாதத்தில் கலந்து கொள்ளலாம்; ஆனல் வாக்களிக்கும் உரிமை அன்றுடம சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஒரு கட்சி பதவியிலிருக்கும்போது, அதே கட்சி பிரபுக்கள் சபையிலும் பெரும்பான்மை பெறும் அளவுக்குச் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மசோதா ஒன்றைத் தள்ளிவைக்கும் உரிமை இவர்களுக்கு இருந்தாலும் ஆறு மாதங்கள் வரைதான் அவ்வாறு செய்யமுடியும்

பரம்பரை உரிமைப்படி இப்போது 'பிரபுத்துவத் தகுதி' பெற்றுள்ளவர்கள், அவர்கள் ஆயுள்வரை தொடர்ந்து பதவி வகிக்கவும், விவாதங்களில் பங்கு கொள்ளவும் முடியும்.

பிரபுக்கள் சபை உறுப்பினர்களிடையே வாக்களிக்கும் உரிமை பெற்றவர்கள், 'வாதம் புரியும் உரிமை மட்டும் பெற்றவர்கள்' என்று இரு பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களின் எண்ணிக்கை 230 அளவுக்கு நிர்ணயிக்கப்படும்.

இவர்களும் தங்களின் 75-வது வயதில் ஓய்வு பெறவேண்டும்

நீதித் துறையில் பிரபுக்கள் சபையின் பங்கும், பணியும் இந்தச் சீரமைப்புகளால் பாதிக்கப்படாது.

மேலே கூறப்பட்டவையெல்லாம் அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும சீரமைப்பு நடவடிக்கைகளாகும்; நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே இதற்கான மசோதா கொண்டுவரப்படும்.

## மறுப்பு

சென்னை 10-வது வட்ட மாநகராட்சி உறுப்பினா த. வெங்கடேசன் தெரிவிப்பதாவது :—

"'திருமணத்தில் தாலி திருட்டு—கழகப் பிரமுகர்களைக் காவலர்கள் தேடுகிருர்கள்' என்று காங்கிரசு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுக் கழகத் தோழர்கட்குக் களங்கம் ஏற்படுத்த முயன்றிருக்கிறது.

திருமணத்துக்கு அமைச்சர்கள் வநத நேரத்தில் ஒலிபெருக்கிக் கோளாறினுல் ஏற்பட்ட பரபரப்பின்போது தாலி காணமற் போனது உண்மை என்றாலும், அது சமபந்தமாக நானே போலீசுககுத் தகவல் தெரிவித்து--சந்தேகத்துக்குரிய சிலரைப் போலீசாரும் விசாரித்தனர்; மேலும் திருடியவரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் போலீசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சந்தடி சாக்கில் உள்ளே நுழைந்துவிட்ட சமூக விரோதிகளின செயலால் இந்த அசம்பாவிதம் ஏற்பட நேர்நதிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு அந்த ஏடு, கழகத தோழர்கள்மீது களங்கம் ஏற்படுத்தமுயன்றிருக்கிறது.

அந்தத் திருமணத்தில் கலந்துகொண்டவர்கள் கழகத் தோழர்கள் மட்டுமல்லர்-காங்கிரசாரும் கலந்துகொண்டனர்; அவர்கள் மீதும இந்தப் பழியைச் சுமத்துகிறதா அந்த ஏடு?"

## டாக்டர் தருமாம்பாள் மகளிர் இலக்கிய வகுப்பு

சென்னை, டிச. 11—

சென்னை நக்கீரர் கழகச் சார்பில் மகளிர்க்கான ஓர் இலக்கிய வகுப்புத் தொடக்க விழா, சென்னைத் தண்டையார்பேட்டை -- கனகப் பிள்ளைத் தெரு -- முருக தனுஷ்கோடி மகளிர் உயர்நிலைப் பள்ளியில் 8—12—68-ல் நடைபெற்றது.

விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் சாரணர்கள் இருமருங்கிலும் நின்று வரவேற்றனர். திருமதி பார்வதி சுப்பராமன் இசையுடன் விழா தொடங்கியது. திருமதி தெய்வநாயகி ஜோதி வரவேற்புரை வழங்கினர்.

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு, நகர மேயர், தமிழகச் சட்டமன்றச் செயலாளர், தமிழகத் தமிழ் ஆட்சிச் சொற்குழுச் செயலர் சி. என். சிங்காரவேல், திரு. கி. வ. ஜகந்நாதன், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியவர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப் பெற்றன.

பேராசிரியர் பு. பா. இராசராசேசுவரியார் தலைமை வகித்து, நக்கீரர் கழகம் தமிழ் மொழி ஆதிக்கத்திற்குச் செய்யும் நற்பணிகளைப் பாராட்டி, மகளிர் பகற்பொழுதினைப் பயனுள்ள நல்ல பொழுதாகக் கழிக்க இத்தகைய முயற்சியை வரவேற்றுப் பெண்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும், குடும்பக் கலை -- சிறுசேமிப்பு முதலியன பற்றியும், தமிழ் இலக்கிய நெறிகளைப் பற்றியும் கற்பிக்க இக்கழகம் முன்வருவதைப் பாராட்டுவதாகக் கூறி, திருவள்ளுவர், காக்கைப்பாடினியர் ஆகியோர் கூறிய கருத்துக்களையும் விளக்கினர்.

கெ. சகுந்தலா அம்மையார், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை விளக்கினை ஏற்றிவைத்து, மகளிர் பொழுதுபோக்கு பற்றி விளக்கிக் கூறி -- டாக்டர் தருமாம்பாள் மகளிர் இலக்கிய வகுப்பினைத் தொடங்கிவைத்தார்.

பின்னர், 'மகாத்மாவும் மகளிரும்' எனும் பொருள் பற்றி திருமதி ஜெயா அருணுசலம் அவர்களும், 'ஒத்துழைப்பு' எனும் பொருள் பற்றி செல்வி பிரியதரிசினி அவர்களும் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்

ஆசிரியர் மறைமலையடிகள் விளக்கினை ஏற்றிவைத்த செல்வி எஸ் பி. சற்குணம், மறைமலையடிகளாரின் தூய தனித் தமிழ்ப் பற்றினையும், அடிகளார் தனித் தமிழ் வளர்ச்சிக்காகவும் மகளிர் சீர்திருத்தத்திற்காகவும் செய்த அருமையான தொண்டுகளையும் விளக்கிக் கூறி, அடிகளாரைப் பின்பற்றி மகளிர் அனைவரும் மொழி வளர்ச்சி ஆக்கப் பணியில் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் விளக்கு. திரு வி. க. விளக்கு, நமச்சிவாயர் விளக்கு, டாக்டர் தருமாம்பாள்விளக்கு, நீலாம்பிகையார் விளக்கு, பண்டிதை கிருஷ்ணவேணியார் விளக்கு ஆகியவைகளை முறையே திருமதிகள் சரோஜினி சத்தியமூர்த்தி, புலவர் ரமணி இராசமாணிககம், இராஜேசுவரி அருணுசலம், கமலம்மாள் பஞ்சாபகேசன், புலவர் தருமாம்பாள், தெய்வநாயகி ஜோதி ஆகியவர்கள் ஏற்றிவைத்தனர்.

தலைவர், சொற்பொழிவாளர், திறப்பாளர் ஆகியவர்களுக்கு மலர் மாலைகளுக்குப் பதில், கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, கைத்தறி கைக்குட்டை, திருக்குறள், காந்தி பொன்மொழிகள் ஆகியவைகள் வழங்கப் பெற்றன.

செல்வி சி. மோ. புனிதவதி நன்றிகூற, விழா இனிது முடிந்தது.

## இருக்கும் இடம் தெரியாது!

**நாம் நேர்மையாகவும், கௌரவமாகவும் நடந்துகொண்டால், சந்தேகமும், மனக்கசப்பும் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடும்!**

—காந்தியார்

## சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில்

# 'அண்ணு சிகிச்சை நிதி' அளிப்புவிழாக்கூட்டம்

★

**14--12--68 சனி மாலை 7 மணிக்கு**

**சென்னை 36-வது வட்டம் சூளை மேடக்ஸ் சாலையில்**

(அஞ்சலகம் அருகில்)

தலைவர்: டி. கே. கபாலி

பேசுவோர்: மு. கருணுநிதி

என். வி. நடராசன் எம்.எல்.சி.

மேயர் வேலூர் நாராயணன்

நீலநாராயணன்

வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.

[ஐந்து ரூபாய்க்கு மேல் அண்ணு சிகிச்சை நிதிக்கு அளிப்பவர்கள் பொருளாளர் கருணுநிதி அவர்களிடம் கூட்ட மேடையில் நேரில் அளித்திடும் விதத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது]

## சின்னமனூர் வட்டாரச் செய்திகள்

சின்னமனூர் எம்.ஜி ஆர். மன்ற 10-வது ஆண்டு நிறைவு விழா, நகரில மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெற்றது.

நகர் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு -- வண்ண வளைவுகளால் விழாக்கோலம் பூண்டிருந்தது.

முதல் நாள் நிகழ்ச்சிக்குத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் பழனிவேல்ராசன் தலைமைவகித்தார்.

டாக்டர் சங்கர், கே. என். என். கணபதி, எஸ். முத்து எம்.எல்.சி. ஆகியோர் பேசியபின், வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் சிறப்புரை ஆற்றினர்.

நகர் தி. மு. கழக செயலாளர் எஸ். வேல்சாமி அமைச்சரை வரவேற்ருர்.

வட்டப் பிரதிநிதி அ. மாரியப்பன் நன்றி கூறினர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி இரவு 7-மணிக்கு நகர் தி. மு. கழகப் பொருளாளர் கே. நூர்முகமது தலைமையில் நடைபெற்றது.

அண்ணு ஆட்சியின் சிறப்புகள் குறித்து, சி. தமிழரசி பி.ஏ., எஸ். வேல்சாமி, எம். இரத்தினம், இரா. சவுந்திரபாண்டியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

எம். ஜி. ஆர். மன்றத் தலைவர் என். எஸ். முனியப்பன் நன்றி கூறினர்.

மூன்ரும் நாள் நிகழ்ச்சிக்கு எம். ஜி. ஆர். மன்றச் செயலாளர் கே. எஸ். இராதா தலைமைவகித்தார்.

மணி—சாமி குழுவினரால், 'யாருக்காக அண்ணு ஆட்சி' எனும் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

நகர் தி. மு. க. அவைத் தலைவர் என். ஏ. முனிராசன் நன்றி கூறினர்.

கூட்டத்தில் மணி—சாமி குழுவினரால் ரூ 83 அறிஞர் அண்ணு சிகிச்சை நிதிக்காக துண்டு ஏந்தி வசூலிக்கப்பட்டது.

### வெள்ளையம்மாபுரம்

வெள்ளையம்மாள்புரம் தி. மு. க. சார்பாக விருமாண்டி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; சி. தமிழரசி பி.ஏ., எம். இரத்தினம், எஸ். வேல்சாமி, ஓ. கருப்பு, எஸ். பி. சிவம் ஆகியோர் பேசினர். அமாவாசி நன்றி கூறினர்.

### குச்சனூர்

29—12—68 அன்று தி. மு. க. சார்பில், தோழர் ரகுபதி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் ஆ. திராவிடமணி, எம். இரத்தினம், எஸ். வேல்சாமி, போஜன், இராசேந்திரன் ஆகியோர் பேசினர்.

### ஓடைப்பட்டி

ஓடைப்பட்டி தி. மு. க. சார்பில் தோழர் சு. இராமு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் ஓ. கருப்பு, எஸ். பி. சுவம், எம். இரத்தினம் ஆகியோர் பேசினர்.

### பல்லவராயனபட்டி

பல்லவராயன்பட்டி தி. மு. க. சார்பில் 8—12—68-ல் தோழர் கே. நடராசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழியர் சி. தமிழரசி பி.ஏ. சொற்பொழிவாற்றினர். செயலாளர் கார்மேகம் நன்றி கூறினர்.

### தேவராம்

6—12—68-ல் நகர் தி. மு. க. மாணவர்–தி.மு. கழகம் ஆகியவை சார்பில் தோழர் ஓ. கிருட்டிணமூர்த்தி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பெரியகுளம் வட்டச் செயலாளர் சி. கண்ணுச்சாமி, ஆ. பழனியாண்டி, ச. முத்து, கா. அப்துல் கரீம், இரா. வேலு, அ. தங்கமணி, எஸ். வேல்சாமி ஆகியோர் பேசினர்.

தோழர் நா. நடராசன் தலைமையில் மணி—சாமி குழுவினரின் 'யாருக்காக அண்ணு ஆட்சி?' என்ற கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

அறிஞர் அண்ணு அவர்களின் சிகிச்சை நிதிக்காகக் கூட்டத்தில் மணி—சாமி குழுவினரால் ரூ. 62 நிதி வசூலிக்கப்பட்டது.

### உ. அம்மாபட்டியில் தி.மு.க. பொதுக்கூட்டம்

27—12—68 அன்று, உ. அம்மாபட்டியில் தி. மு. க. சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; வழக்கறிஞர் செல்லையா தலைமை வகித்தார்.

தோழர்கள் மு. காளை, எஸ். வேல்சாமி, எம். இரத்தினம், மா. இராசாங்கம் எம்.எல்.ஏ., சி. தமிழரசி பி.ஏ. ஆகியோர் பேசினர்.

### உத்தமபாளையம்

உத்தமபாளையம் தி. மு. க. சார்பில் தோழர் மாரிசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் மா. இராசாங்கம் எம்.எல்.ஏ., ஆ திராவிடமணி ஆகியோர் பேசினர். வட்டப் பிரதிநிதி அலிபா நன்றி கூறினர்.

# கச்சத் தீவுப் பிரச்சினையில் டில்லி...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ச. சோ. உறுப்பினர் பெர்னாண்டஸ் பேசுகையில், வினவும் முறையில் குறிப்பிட்டதாவது:—

"கச்சத் தீவு பற்றிய பேச்சு வார்த்தைகள் எந்தக் கட்டத்தில் இருக்கின்றன? 'கச்சத் தீவு இந்தியாவுக்குத்தான் சொந்தம்' என்ற அளவுக்கு அரசினர் தெளிவுள்ளவர்களாக இருக்கின்றனரா?

"கச்சத் தீவை, இலங்கை எப்போது பிடித்துக் கொண்டது என்பதைத் தெரிவிக்க வேண்டும்."

"'கச்சத் தீவு இந்தியப் பகுதிதான்' என அமைச்சர் அறிவிக்க வேண்டும்"

என, ஜனசங்க உறுப்பினர் பேனி சங்கர் சர்மா கேட்டுக் கொண்டார்.

விவாதத்திற்குப் பதிலளிக்கையில், வெளிநாட்டுத் துறைத் துணையமைச்சர் சுரேந்திர பால் சிங் கூறியதாவது:—

"கச்சத் தீவு யாருக்குச் சொந்தம் என்பதுபற்றி இப்போது இரு நாடுகளுக்கிடையேயும் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது; இந்த நிலையில், அதுபற்றி விவாதிப்பது நல்லதல்ல; சுமூகமான பேச்சுவார்த்தைக்கு அது தடையாக இருக்கும்.

"கச்சத் தீவை, சட்ட விரோதமாகவோ அல்லது நிர்ப்பந்தமாகவோ இலங்கை பிடித்துக் கொண்டதாகச் சொல்வது சரியன்று; அந்தத் தீவில் மனித நடமாட்டமே இல்லை......

துணையமைச்சர் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கையில், தி.மு.க. — ஜனசங்கம் — ச. சோ. உறுப்பினர்கள் குறுக்கிட்டுக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

**"இமயமலையிலும் மனித நடமாட்டம் இல்லை; அதற்காக அதை விட்டுவிடப் போகிறீர்களா?"**

என்று ச. சோ. உறுப்பினர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆத்திரத்துடன் கேட்டார்.

உடனே அமைச்சர் டாக்டர் ராம் சுபாக் சிங் குறுக்கிட்டுக் கூறியதாவது:—

"கச்சத் தீவில் ஒரு கத்தோலிக்க ஆலயம்தான் இருக்கிறது; வேறு கட்டிடம் எதுவும் அங்கு இல்லை; அந்தக் கோயிலுக்குத்தான் மக்கள் போய்வருகிறார்கள்."

சுதந்தரா உறுப்பினர் என். ஜி. ரங்காவின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் மகேந்திரபால் சிங் கூறியதாவது:—

"கச்சத் தீவில் மீன் பிடிக்கவோ, அல்லது அங்கு நடக்கும் திருவிழாவில் பங்குகொள்ளவோ தமிழர்கள் தடுக்கப்படுவதில்லை."

**உடனே கழக உறுப்பினர் டி. கிருட்டினன், அவர் கூறியதை மறுத்தார்; 'உண்மையில், திருவிழாவுக்குச் சென்ற தமிழர்களை, இலங்கை அரசு கைது செய்தது' எனக் குறிப்பிட்டார்.**

---

அமைச்சர்

## கே. ஏ. மதியழகன்

### சுற்றுப்பயணம்

டிச. 13 காலை 9-மணி: மீளவிட்டான்—ஊராட்சி அலுவலகத் திறப்பு; தென்னை மரங்களுக்கு உரமிடுதல்; 11-மணி: தென திருப்பேரை ஊராட்சியில் அண்ணா படத் திறப்பு; 11-30 மணி: ஆழ்வார் திருநகரி—வள்ளுவர் படத் திறப்பு; மாலை 4-மணி: திருச்செந்தூர்—ஊராட்சி வரவேற்பு; 5-மணி: வீரபாண்டியன்பட்டினம்—ஊராட்சி வரவேற்பு; 6-மணி: காயல்பட்டினம்—ஊராட்சி வரவேற்பு; 7-மணி: ஆறுமுகனேரி—காந்தி நூற்றாண்டு விழாக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டல்.

அமைச்சர்

---

அமைச்சர்

## சத்தியவாணிமுத்து

### நிகழ்ச்சிகள்

டிச. 13 மாலை 10-30 மணி: சேலம்—மலைவாசிகள் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்பு; மாலை 5-மணி: கலப்பு மணத் தம்பதிகட்குப் பரிசளிப்பு நிகழ்ச்சி.

---

## ஏ. வி. பி. ஆசைத்தம்பி சிங்கப்பூர் பயணம்

சென்னை, டிச. 12—

சிங்கப்பூர் குடியரசுத் திராவிட முற்போக்குக் கழக அழைப்பின் பேரில், தமிழகச் சட்டமன்ற உறுப்பினர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி நாளை பகல் விமானம்மூலம் சிங்கப்பூருக்குப் பயணமாகிறார்.

15—12—68 அன்று சிங்கப்பூர் தேசிய அரங்கில் நடைபெறவிருக்கும் முத்தமிழ் விழாவில் சிறப்புரையாற்றுவார்.

அதன்பின் 15-நாட்களுக்கு மலேசியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பேசுவார்.

சனவரி முதல் வாரத்தில் சிங்கப்பூரிலிருந்து தாயகம் திரும்புவார்.

---

## புலவர் கோவிந்தன் காருக்கு விபத்து

### மயிரிழையில் உயிர் தப்பினர்

சென்னை, டிச. 12—

தமிழகச் சட்டமன்றத் துணைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள், இன்று தமது குடும்பத்தாருடன் காரில் தம் சொந்த ஊருக்குப் புறப்பட்டுச் சென்றபோது சென்னை சபையர் தியேட்டர், எதிரில் அவரது காரின் பின்னால் வந்த ஒரு லாரி காரில் மோதியது உடனே கார் வலப்பக்கம் திரும்பி ஓடியபோது, எதிரே வந்த பஸ்சுடன் மோதியது

---

## செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க.

### நகராட்சி மன்றத் தேர்தல் ஆய்வுக் குழு

"செங்கற்பட்டு மாவட்ட நகராட்சிமன்றத் தேர்தல் ஆய்வுக் குழு, 14—12—68 பகல் 2-மணிக்கு செங்கற்பட்டுக்கும், 15—12—68 மாலை 6-மணிக்கு திருவொற்றியூருக்கும் வருகிறது.

"நகராட்சித் தேர்தலில் போட்டிவிட விழையும் கழகத் தோழர்கள் தாங்கள் போட்டியிட விரும்பும் வட்டம்-- தங்களுக்கு உள்ள வாய்ப்பு ஆகியவைகளை விளக்கி எழுதித் தருவதுடன், மாவட்டக் கழகத்திற்கு வேட்பு மனுத் தொகையாக ரூ. 25 உடன செலுத்தக் கோருகிறேன்"

என்று ஆய்வுக் குழுத் தலைவரும் மாவட்டச் செயலாளருமான சே. டி. எஸ். மணி அறிவிக்கிறார்.

---

அண்ணா சிகிச்சை நிதி

## செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர்

### வேண்டுகோள்

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே. டி. எஸ். மணி அறிவிப்பதாது:—

"செங்கற்பட்டு மாவட்டத்தின் சார்பில் அண்ணா சிகிச்சை நிதிக்கு ரூ. 10,001 அளிப்பது என்று மாவட்டக் கழகம் எடுத்துள்ள முடிவுக்கு ஒப்ப நம் மாவட்டத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் -- சட்டமன்ற -- சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், வட்டக் கழக -- நகரக் கழக -- கிளைக் கழகச் செயலாளர்கள், கழகத் தோழர்கள், அண்ணாவின் அனுதாபிகள் ஆகியோர் உடனடியாக நிதியை, தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

---

## மா. முத்துசாமி

### சுற்றுப்பயணம்

டிச. 13 காலை 10 மணி: பாம்பபடையூர்—ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டல்; 11-மணி: ஊராட்சி வரவேற்பு; மாலை 3-30 மணி: ஆடுதுறை—குமரகுருபரர் உயர்நிலைப் பள்ளி இலக்கிய விழா; 4-30 மணி: அண்ணா மன்றத் திறப்பு; 5-மணி: திருவாவடுதுறை ஆதீன வரவேற்பு; 5-30 மணி: சாலை முகப்பு வளைவு திறப்பு விழா; 7-மணி: குடந்லதை பொதுமக்கள் வரவேற்பு.

---

## இரும்படிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை?

### தி. மு. க. ஆட்சியைக் கவிழ்க்க சி. சுப்பிரமணியம் 'சதி'?

### மக்களவையில் தகவல் --- தலைமையமைச்சர் மழுப்பல்

புதுடில்லி, டிச. 11—

"இரும்படிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை?"

அண்மையில் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம், வாஷிங்டனில் உலக பாங்கித் தலைவரைச் சந்தித்ததைப்பற்றி மக்களவையில் ச. சோ. உறுப்பினர் காமேசுவர் சிங் மேற்கண்டவாறு கேட்டார்.

தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி பதில் அளிக்கையில், சுப்பிரமணியம் சொந்த முறையில் உலக பாங்கித் தலைவரைச் சந்தித்தார் என்றும், அரசுப் பிரதிநிதியாக அல்ல வென்றும் கூறினார்.

"தமிழகத்தில் தி. மு. க. அரசைக் கவிழ்க்க உலக பாங்கிடம் திரு. சுப்பிரமணியம் பணம் கேட்டாரா?" என்று ஹேம் பருவா கேட்டார்.

"நிச்சயமாக இல்லை" என்று திருமதி இந்திரா காந்தி பதில் அளித்தார்.

துவக்கத்தில் வெளிவிவகாரத் துணையமைச்சர் சுரேந்திர பால் சிங், மூலக் கேள்விக்குப் பதில் அளிக்கையில், 'குடும்பக் கட்டுப்பாடு -- அபிவிருத்தி -- விவசாயம், உயர்ந்த ரக விதைகள் ஆகியவை பற்றிப் பொதப்படையாக அவர்கள் விவாதித்தனர்' என்று கூறினார்.

---

## ஆந்திர மாநில தி. மு. க. தேர்தல்

### ஆணையாளர்: புலவர் மி. ச. நடேசன்

15—12—68 ஞாயிறு காலை 10-மணிக்கு ஆந்திர மாநிலம் புத்தூர் வைசியாள் சத்திரத்தில் நடைபெறும் ஆந்திர மாநில தி.மு.க. அமைப்புத் தேர்தல், தலைமைக் கழக ஆணையாளர் புலவர் மி. ச. நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

---

# அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள்:—

| | ரூ. காசு |
|---|---|
| நேற்றைய இதழ்த் தொடர்ச்சி | 25,574.44 |
| அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் மூலம்:— | |
| விருத்தாசலம் நகர தி.மு.க. கிளை | 301.00 |
| ,, ஆர்.வி. வைத்தியநாதன் | 101.00 |
| ,, வி. கிருஷ்ணமூர்த்தி | 11.00 |
| கள்ளக்குறிச்சி மாடூர் தி.மு.க. கிளை | 25.00 |
| சின்னசேலம் அம்பாயிரம் | 50.00 |
| பெரம்பூர்த் தொகுதிப் பாராட்டுக் கூட்டத்தில் அமைச்சர் டாக்டர் சத்தியவாணிமுத்து மூலம்:— | |
| சென்னை 42-வது வட்டம் சு. பாலன் | 101 00 |
| ,, 43-வது வட்டம் டி.என். ராசன் | 101.00 |
| ,, 42-வது வட்டம் ப. தனசேகரன் | 25.00 |
| ,, 45-வது வட்டம் பாண்டியன் | 25 00 |
| ,, 46-வது வட்டம் கமலக்கண்ணன் | 10.00 |
| ,, 46-வது வட்டம் அப்புச்செட்டி | 10.00 |
| ஈரோடு மு. சின்னசாமி எம்.எல்.ஏ. | 250 00 |
| சென்னை-28 இரண்டாம் குறுக்குத் தெரு ஏ. ராமகிருஷ்ணன் பி.எஸ்சி. | 101.00 |
| சென்னை திரைப்பட இயக்குநர் ப. நீலகண்டன் | 100.00 |
| சென்னை ஆ. பூவராகமூர்த்தி | 100 00 |
| சென்னை 9-வது வட்டம் பி. பொன்னுரங்கம் | 20.00 |
| பெரியகுளம் 7-வது வார்டு எம்.ஜி.ஆர். மன்றக் கூட்டத்தில் வசூல்—ந. காமாட்சி மூலம் | 21.07 |
| சென்னை-5 வி. ஜெயராம் | 11 00 |
| மொடக்குறிச்சி க. நடராசன் | 10.00 |
| சிவகங்கை மா. இராசரத்தினம் மூலம் | 10.00 |
| வேலூர் மாணவி எம். கெஜலட்மி | 10.00 |
| ,, மாணவர் எம். வேணுகோபால் | 10.00 |
| ,, ,, யுவராஜ் | 10.00 |
| வேலூர்-கொசப்பேட்டை வைராபாய் | 10.00 |
| பெண்ணாடம் சுப. கிருஷ்ணன் நண்பர்கள் | 10.00 |
| கரூர் ந. இளங்கோ | 10.00 |
| புல்லந்தை கு. ஜெயராமன் | 10 00 |
| சேலம்-அன்னதானப்பட்டி எஸ். பி. ராசு | 10.00 |
| கணபதிபாளையம் தி.மு.க. கிளை | 10.00 |
| ஐ.பி. 488 மீன் பிடிக்கும் தொழிலாளர்கள்—இராயபுரம் என். புஷ்பலிங்கம் மூலம் | 10.00 |
| திருச்சி-8 சு. இராசரத்தினம் | 10 00 |
| தஞ்சை எஸ்.கே.வி. நடராச நாடார் | 10 00 |
| போடிநாயக்கனூர் மா. செயராசு | 10.61 |
| சென்னை-31 கோ.சு. மணி நினைவுமன்றம் வள்ளிமணாளன் | 5.65 |
| சென்னை-சைதை புலவர் மி ச. நடேசன் | 5.55 |
| வத்திராயிருப்பு கே. முனியப்பன் | 5.00 |
| அரிமழம் ப.வே. திருமாவளவன் | 5 00 |
| குமாரகுப்பம் ஆ. முருகையன் | 5.00 |
| திருமழபாடி புதுக்கோட்டை ஏ. ஐசக்ராசையா | 5.00 |
| மதுரை-9 தெ. குருசாமி | 5 00 |
| இராசபாளையம் பொன். காளிமுத்து | 5.00 |
| அமிர்தநகர் காலனி-தாம்பரம் சி. சின்னகண்ணு | 5.00 |
| பாப்பின்னிசேரி-கேரளா ருக்னுத்தீன் | 5.00 |
| தூத்துக்குடி-4 தி. மகாலிங்கம் | 5.00 |
| மங்களூர்-1 ந. விசுவநாதன் | 5.00 |
| காட்டூர் கு.சு. மகாலிங்கம் | 5.00 |
| ரூ 3 வீதம் அளித்தோர்: ஊத்துமலை தி. சுப்பிரமணியம், சென்னை-1 மு. நூர்தீன்-சலாம், பட்டிவீரன்பட்டி இ. நாராயணன் ஆகிய 3 பேர் | 9.00 |
| ரூ. 2 வீதம் அளித்தோர்: காரைக்குடி அஞ்செழுத்து, காரைக்குடி கிருஷ்ண நாயர், கீழக்கரை முருகானந்தம், வெள்ளாகுளம் அழகர்சாமி, குறுக்குச்சாலை எஸ். செல்லம்மாள், தேனி ஆ. ஸ்தானிஸ்லாஸ், தாராசுரம் செல்வராசன், கிழக்குராசாப்பாளையம் இராமலிங்கம், ரேணிகுண்டா சிந்தல சீராமுலு செட்டி, சென்னை-1 ஆர். இராமச்சந்திரன், சென்னை-1 பி. பாக்கியநாதன் ஆகிய 11 பேர் | 22.00 |
| ரூ. 1 வீதம் அளித்தோர்: அழகியமணவாளம் கா. பழனியாண்டி, நெல்லை-6 டி.எம். இராமலிங்கம், சிவகாசி பெ. மகிழன்பன், அநுமந்தன்பட்டி கே. தங்கராசு, முத்துக்கருப்பன் ஆகிய 5 பேர் | 5.00 |
| ஆக மொத்தம் | 27,190.32 |

நிதி அனுப்ப வேண்டிய முகவரி:—

மு. கருணாநிதி, பொருளாளர்,
தி.மு.க. தலைமை நிலையம், இராயபுரம், சென்னை-13

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.